(இ) அது எப்போது நிறைவேறும் ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவரவர்களே,

(அ) ஊராட்சி கொடுக்க வேண்டிய பங்குத் தொகையினைச் செலுத்த தாமதித்ததால் பால வேலையில் தாமதம் ஏற்பட்டது.

(இ) தற்போது பால வேலை நடந்து வருகிறது.

திரு. கா. வேழவேந்தன் : தலைவரவர்களே, இந்தச் சிறு பாலத்தைக் கட்டுவதன் மூலம் பல ஊர்களுக்கு இணைப்பு ஏற்படுத்த முடியும். எனவே ஒரு குறிப்பிட்ட காலகட்டத்திற்குள்ளாக இதை முடிக்க வேண்டுமென்று ஒரு தனி ஆணை பிறப்பிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவரவர்களே, வேலை நடந்து கொண்டிருக்கிறது, 16,500 ரூபாய்க்கு டெண்டர் விடப்பட்டு 3,163 ரூபாய் அளவிலே நேற்றுவரையில் வேலை நடந்திருக்கிறது. ஆகவே, இன்னும் சில தினங்களிலே இந்த வேலை முடிந்துவிடும்.

Diamond Jubilee Arch in Thanjavur.

*334 Q.—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) Whether the Thanjavur Municipal Council had passed a resolution on January 24, 1974 requesting the Government to demolish the Diamond Jubilee Coronation Arch constructed during 1911 toc ommemorate the Coronation of King George-V ; and

(*b*) if so, the action taken thereon ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : (அ) அண்டு (இ) தஞ்சாவூரில் மணிக்கூண்டுக்கு அருகில் உள்ள மன்னர் முடிசூட்டு வைர விழா நினைவு வளைவு, பாதசாரிகள் வண்டிகள் போக்குவரத்துக்கு இடையூறாக இருப்பதால் அதை இடித்துவிடவேண்டும் என்று தஞ்சாவூர் நகராட்சி மன்றம் 1974-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 24-ஆம் நாளிட்ட தனது 193-ஆவது தீர்மானத்தில் முடிவு செய்தது. தஞ்சை நகராட்சி மன்றத்தின் வேண்டுகோள் அரசால் ஏற்கப்படவில்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, இந்தத் தீர்மானம் ஏற்கப்படாததற்கு ஏதாவது காரணம் தெரிவிக்கப்பட்டிருக்கிறதா ? பழங்கால மன்னர்களின் நினைவாக அது இருந்தாலும்கூட வருங்கால மக்களுக்கு வரலாற்றை எடுத்துக்காட்டுவதாக அவைகள் இருக்க ஏதாவது புது உத்தரவு பிறப்பிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : இந்தத் தீர்மானத்தை ஏற்றுக்கொள்ளவில்லை.